செய்தி வெளியீடு எண் : 586

அரசு செய்தி வெளியீடு – 18-7-2008

# மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அறிவிப்பு.

***

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 16-07-2008 அன்று நடந்த அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி 18-07-2008 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தொழில் அதிபர்கள்/முனைவர்களுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்கண்ட அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

1. மாண்புமிகு மின்துறை அமைச்சர்
2. மாண்புமிகு சிறுதொழில் அமைச்சர்
3. நிதிச் செயலர்
4. தொழில் துறை செயலர்
5. சிறுதொழில்துறை செயலர்
6. எரிசக்தித் துறை செயலர்
7. தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்
8. செயலாண்மை இயக்குனர், தமிழ்நாடு மின் வாரியம்.
9. உறுப்பினர், பகிர்மானம், தமிழ்நாடு மின்வாரியம்.
10. உறுப்பினர், உற்பத்தி, தமிழ்நாடு மின் வாரியம்.
11. உறுப்பினர், கணக்கியல், தமிழ்நாடு மின் வாரியம்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் மின்சாரத் துறை அமைச்சர், மின்வாரியத் தலைவர், செயலர் நிதி, செயலர் எரிசக்தி ஆகியோர் முதலமைச்சர் கலைஞர் அவர்களோடு கலந்து பேசி பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. தொழிற்சாலைகளுக்கு வாரத்தில் ஒரு நாள் (24 மணி நேரம்) விடுமுறை விடப்படும்.
2. மின்சார உற்பத்தி வரி யூனிட் ஒன்றிற்கு 10 பைசா தள்ளுபடி செய்யப்படும்.
3. கொதிகல எண்ணை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்பவர்களுக்கு மதிப்பு கூட்டு வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.
4. விவசாயத்திற்கு வாரத்தில் 5 நாட்களுக்கு பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் இப்போது வழங்குவது போல் மின்சாரம் வழங்கப்படும். மீதி உள்ள 2 நாட்களில் பகலில் 4 மணி நேரமும் இரவில் 8 மணிநேரமும் மின்சாரம் வழங்கப்படும். கிராமங்களில் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு பகல்நேரத்தில் நான்கு மணி நேரம் மின் தடை செய்யப்படும்.
5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழகம் முழுவதும் தெருவிளக்குகள் எரிவதற்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படும். மாணவர்கள் படிக்க ஏதுவாக மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை தடையின்றி மின்சாரம் வழங்கப்படும். மேலும் குடிநீர் வழங்கல் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு மின்சாரம் தடையின்றி வழங்கப்படும்.
6. சென்னை மாநகாத்தில் பகலில் ஒரு மணி நேரமும் மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தினமும் 2 மணி நேரமும் மின்சாரம் தடை செய்யப்படும். எந்தெந்த பகுதிகளில், எந்தெந்த நேரத்தில் மின் தடை செய்யப்படும் என்பதை மின்வாரியம் செய்தித்தாள்கள் மூலம் முன்கூட்டியே தெரிவிக்கும்.
7. தமிழ்நாடு மின்சார வாரியம் கூடுதலாக மின்சாரத்தைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய கூடுதலாக மாதம் ஒன்றுக்கு ஐம்பது கோடி

ரூபாய் செலவாகும் என்ற மின்வாரியத்தின் வேண்டுகோளையேற்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாதந்தோறும் ஐம்பது கோடி ரூபாய் மின்வாரியத்திற்கு அளிக்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

8. இந்த அறிவிப்புகள் அனைத்தும் 21-7-2008 திங்கட்கிழமை முதல் அமலுக்கு வரும்.

***

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.